# திருக்குறளில் எதிர்காலவியல் அணுகுமுறை

***முனைவர் ம. தாமரைச் செல்வி***
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஒருங்கிணைப்பாளர் - பிற மொழிகள் துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, (சுழற்சி - 2), சென்னை
https://doi.org/10.5281/zenodo.15526518

***ஆய்வுச்சுருக்கம்***
*இலக்கியம் என்பது மனித வாழ்க்கைக்குரிய இலக்கை இயம்புவது. மனித குலத்தின் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் இலக்கியத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. நல்லவர்களையும் அவர்களுக்கு இடையூறு செய்யும் தீயவர்களையும் அன்பு, அறம் போன்ற நல்லுணர்வுகளையும் அவற்றைப் பகைக்கின்ற வன்பு, மறம் போன்ற அல்லுணர்வுகளையும் இலக்கியங்கள் வடிக்கின்றன. வாழ்க்கையைப் பற்றிப் பாடுவதால் இலக்கியங்கள் அனைவருக்கும் பொதுவாக விளங்குகின்றன. இலக்கியம் என்பது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த கோடான கோடி மக்களுடைய எண்ணங்களின் பேழையாகும். காலந்தோறும் அப்பேழை பெருகுகின்றது. ஏனைய கலைகளிலும் இலக்கியம் வாழ்வொடு பொருந்திய கலையாதலின் இலக்கியம் இயற்றிய புலவன் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அனுபவங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு மனித சமுதாயம் எதிர்காலத்தில் எப்படி எல்லாம் இருக்க வேண்டும், எவ்வாறு வாழ்ந்தால் எத்தகைய பயன் கிடைக்கும் என்பது பற்றிய எதிர்கால அணுகுமுறையில் இலக்கியம் படைக்கின்றான். அவ்வாறான இலக்கியங்களுள் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் காலத்தை வென்று குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவும் காலத்தை வென்று நிற்பது திருக்குறள். புதிய புதிய கருத்தாக்கங்களைப் பெற்று, இனம், மொழி, நாடு என எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.*

***"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து***
***வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"***
***"எல்லாப் பொருளும் இதன்பால் உள"***
***"உலகப் பொதுமறை"***

*எனப் பலதரப்பட்ட சிறப்புகளைக் கொண்டது திருக்குறள். அவ்வகையில் திருக்குறளில் எதிர்காலவியல் அணுகுமுறை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*
***திறவுச்சொற்கள்:*** *திருக்குறளும் அறவியல் அணுகுமுறையும், வள்ளுவர் காட்டும் வாழ்வியல் அறம், கொல்லாமை, பொய்யாமை, திருக்குறள் காட்டும் எதிர்காலவியல்.*

**முன்னுரை**

உலகத்தோர்க்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் முதன்மையராய் வைத்து எண்ணப்படுகிறார். உலகம் போற்றும் திருக்குறளில் அவர் வகுத்துள்ள ஒழுக்கமுறை இன்னார் இனியார் என்ற வரையறையின்றி யாவரும் கையாளுவதற்குரியதாய், பொதுநோக்கப் பார்வையோடு இயற்றப்பட்டுள்ளது. ஒழுக்கமுடையோர் விழுப்பமடைவர் என்பதைத்

தம் வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டியவர். தாம் பெற்ற இன்பத்தை மற்றையோரும் பெறவேண்டும் என்னும் உயரிய எண்ணத்தராய், அனைவரும் உய்யுமாறு ஒப்பற்ற ஒழுக்கமுறையை திருக்குறள் மூலமாக உணர்த்தியுள்ளார். இதனையே வள்ளுவர்,

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** (குறள். 131)

தமிழ் மறையாகிய திருக்குறள் உணர்த்தும் பொருளால் உலகப் பொதுமறையாக விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறள் தமிழ் அறிஞர்களையும் உலக அறிஞர்களையும் கவர்ந்திருக்கிறது. திருக்குறள் கற்குந்தோறும் புதிய புதிய பொருளைக் கொடுக்கக்கூடிய தன்மையது. எத்தனை உரைகள் தோன்றினாலும் எத்தனை இடங்களில் பேசப்பட்டாலும் அதன் சுவை குறையாது.

மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்க்கை நூலாகத் திகழும் இது உலகப்பொதுமை, குடிகளைத் தழுவிய முடியாட்சி, காதல் வாழ்க்கை முதலியன பற்றிப் பேசிய பெருமையை உடையது. திருக்குறளில் குறிப்பிட்ட மொழி, இனம், நாடு, சமயம் ஆகியன பற்றிய செய்திகளே இல்லை. ஆனால் ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பது உரைக்கப்பட்டுள்ளது. சமய உண்மைகளும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. மொத்தத்தில் மனிதன் வளர்வதற்குரிய வழிவகைகளை இந்நூல் கூறுகிறது.

திருக்குறள் மக்கள் சமுதாயத்திற்குரிய அறநெறியை உணர்த்துகின்ற அறநூலாகவும், தவம் செய்யும் துறவிகளுக்கு அறநெறி உணர்த்துகின்ற ஞான நூலாகவும், அரசனுக்கு அரசியல்நெறி, செங்கோண்மை பற்றி விளக்கிக் கூறுகின்ற அரசியல் நூலாகவும், பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை என்று பொருளின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்ற பொருளியல் நூலாகவும், உலக அரங்கில் கல்வியை இயக்கமாக்கி கற்க என்று ஆணையிட்ட கல்வி நூலாகவும், அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறிவை முதன்மைப்படுத்திய நூலாகவும் அமைகிறது. வள்ளுவர்,

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்** (குறள். 394)

கற்றவர்களின் இயல்பை இவ்வாறு விளக்குகிறார்.

சமய நெறிகளுக்குரிய அடிப்படை உரிமைகளைக் கூறுகின்றமையால் அறநூலாகவும், காதல் இருவர் கருத்து ஒருமித்து வாழும் மனையற நெறிகள் பேசுகின்றமையால் குடும்பவியல் நூலாகவும் அமைந்திருப்பதை பெருமையோடு குறிப்பிடுவதற்குரிய பேறு பெற்றவர்களாக தமிழர் திகழ முடிகிறது.

## திருக்குறளும் அறவியல் அணுகுமுறையும்

அறம் என்றால் தொண்டு, தூய்மை என்பது பொருளாகும். இத்தொண்டை எக்காரணம் கொண்டும் சுயநலம் கருதாமல், பொதுநலம் கருதியே செயல்பட வேண்டும்.

**அறநெறி முதற்றே அரசின் கொற்றமாகும்'**

என்று புறநானூறும்

**அரசியல் பிழையாது அறநெறி காட்டி**
**பெரியோர் சொன்ன அடிவழிப் பிழையாது**[2]

என்று மதுரைக்காஞ்சியும்

**அன்றறிவோம் என்னாது அறஞ்செய்க**
(குறள். 36)

என்று திருக்குறளும் அறச்சிந்தனைகளை எடுத்தியம்புகிறது. வாழ்க்கைக்கு உகந்த ஒழுக்கத்தைச் சொல்வதுதான் அறத்திற்கான அடிப்படை.

**"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்"**[3]

என்கிறது மணிமேகலை.

## வள்ளுவம் காட்டும் வாழ்வியல் அறம்

அன்புடைமை, பகுத்தறிதல், வாய்மை, குற்றங்கூறல், வினைத்தூய்மை, கள்ளுண்ணாமை, வெகுளாமை ஆகியவற்றை அறங்களாக வள்ளுவர் கூறுகின்றார். "அன்பு" என்பது

*வாழும் உயிர்களுக்குப் பொதுவான ஒன்றாகும். இது இயற்கை உணர்வுகளில் ஒன்று. அதனால்தான் மனிதப் பிறவியானது விழுமியது என்று சான்றோரால் போற்றப் பெற்றது. பண்டைத் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையை ஒழுங்கு முறையுடன், அறநெறியுடன் ஒரு வரையறைக்குள் அமைத்துக் கொண்டு அன்பு வழியில் வாழ்ந்தனர். எல்லா நிலையிலும் அறத்தை வலியுறுத்திச் சென்றனர்.*

*தனிமனித நிலை, குடும்ப நிலை, சமூக நிலை என்ற அனைத்துத் தளங்களிலும் மனிதர்கள், பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள் எனக் கணக்கிலடங்காதவை. வாழ்தலென்பது ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து சமுதாயத்திற்கான வாழ்க்கையாக அமைய வேண்டும்.*

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற (குறள். 34)***

*என்று வள்ளுவர் மனதளவிலும் குற்றம் செய்யாமல் இருத்தலே அறம் என்று வலியுறுத்தியுள்ளார்.*

*அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் போன்றவை மனித மாண்புகளை விளக்குகின்றன.*

***பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற***
***செய்யாமை செய்யாமை நன்று (குறள். 297)***

*என்ற குறட்பாவை ஈண்டு நினையலாம்.*

**கொல்லாமை**

*கொல்லாமைசூழும்நெறிமனிதர்களுக்கே உரியதாகும். மனிதர்கள்தான் சிந்திக்கின்ற ஆற்றல் படைத்தவர்கள். எது நல்லது; எது தீயது என்று பகுத்துப் பார்க்கின்ற பண்பு மனிதர்களுக்கு மட்டுமே உள்ளது.*

*மனிதனை மனிதப் பண்போடு இருக்கச் செய்வதற்காகவே திருக்குறளை வடித்தளித்த வள்ளுவர் - கொல்லாமை என்று ஓர் அதிகாரம் உண்டாக்கி - மனிதர்களுக்கு அன்புணர்வை ஊட்டுகின்றார். கொல்லாமை சூழும் வாழ்வியல் நெறியைக் காட்டுகின்றார்.*

***அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்***
***பிறவினை யெல்லாம் தரும் (குறள். 321)***

*என்கிறார். அறமாகிய செயல் எது எனக் கேட்பீராகில், அஃது ஓர் உயிரையும் கொல்லாதிருத்தலேயாகும். கொல்லுதல் என்பது அறமற்ற செயல்கள் அனைத்தையும் விளைவித்துவிடும். அதாவது, கொல்லும் செயல் என்பது ஒருவனிடத்தில் இருந்துவிடுமானால், நாட்டில் கொடுமையான செயல்கள் என்னவெல்லாம் உள்ளனவோ, அத்தனையையும் அவன் மிக எளிதாகத் தடையின்றித் தவறாமல் செய்துவிடுவான். கொடுமையான செயல்கள் அனைத்துக்கும் கொல்லுதல் ஆகிய செயலே அடிப்படையானதாக அமைந்துவிடும். அதனால் கொல்லும் செயலைச் செய்யாதே என வள்ளுவர் எச்சரிக்கின்றார்.*

***தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்***
***எங்ஙனம் ஆளும் அருள் (குறள். 251)***

*என்ற குறட்பாவில், தன்னுடைய தசையைப் பெருக்குவதற்குப் பிற உயிரைக் கொன்று அதன் உடலைத் தின்பவனிடத்தில் அருள் உணர்வை எப்படிக் காண முடியும் என்று வினா எழுப்புகின்றார் வள்ளுவர்.*

*நன்னெறி என்று சொல்லப்படுவது எதுவெனில், எந்த உயிரையும் கொல்லாமல் - மற்ற உயிரைக் காப்பதுதான். உலகத்தில் எத்தனை நன்னெறிகள் இருப்பினும் அவற்றுக்கெல்லாம் தலையாயது கொல்லாமை என்கிறார்.*

***நிலையஞ்சி நீத்தாருள் ளெல்லாங் கொலையஞ்சிக்***
***கொல்லாமை சூழ்வான் தலை (குறள். 325)***

*என்றும், ஒருவன் தனது வாழ்வின் அறநெறியாகக் கொல்லாமையைக் கொண்டு ஒழுகுவானானால், அவனை நெருங்குவதற்குச் சாவுகூட அஞ்சும் என்கிறார்.*

***தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி***
***தின்னுயிர் நீக்கும் வினை (குறள். 327)***

*என்ற குறட்பாவில் தன்னுடைய உயிரே போவதாக இருந்தாலும்கூட அதற்காகப் பிற உயிரைப் போக்குகின்ற செயலில் ஈடுபடுதல் கூடாது என்ற வாழ்வியல் அறத்தை வகுத்துக் காட்டுகின்றார்.*

உயிர்க்கொலையால் கிடைக்கப்பெற்ற புலாலை உண்ணும் கொடியவர்களை எமதூதுவர் கறையானைப் போன்று பற்றிக்கொண்டு அவர்தம் உயிரைப் பறித்து அவ்வுயிரை நரகத்தில் மல்லாக்கத் தள்ளியும் தலைகீழாக இட்டும் பலவிதக் கொடுமைக்கு ஆட்படுத்துவர். இதனை,

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே**[4]

என்கிறார் திருமூலர். மேலும், பிற உயிர்களைக் கொல்லுதலைத் தவிர்க்க வேண்டும் என்னும் அறத்தை உணர்த்தும் முகமாக அவ்வையார்,

**புலையும் கொலையும் தவிர்**[5]

என்ற பாடலடிகளில் உணர்த்துகிறார். இவருக்குப் பின்வந்த உலகநாதர்,

**கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்**[6]

என்பதில் கொலைத்தொழில் புரிபவரோடு தொடர்பிருத்தலே கூடாது போன்ற கருத்துகளும் ஈண்டு நினையத்தக்கது.

## பொய்யாமை

மனிதனுக்குக் கடவுள் நாவைத் தந்ததும் பேசும் சக்தியைத் தந்ததும் உண்மையைப் பேசுவதற்கே ஆகும். ஆனால், மனிதனோ அவ்வாறின்றி உண்மையை விடுத்துப் பொய்மையைப் பேசிப் பாவத்தைப் பெருக்கி இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தைப் பெருக்கிக் கொள்கிறான்.

ஒருவன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய தலையாய அறங்களுள் பொய்யாமையும் ஒன்று. வாய்மையோடு இருப்பான் எனில் அவனது வாழ்க்கை சிறந்து விளங்கும். பொய் கூறாது வாய்மையுடன் இருத்தல் ஒவ்வொருவரின் சிறந்த அடிப்படையான அறமாகும்.

**பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை**
**எல்லா அறமும் தரும் (குறள். 296)**
**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று (குறள். 297)**

போன்ற வள்ளுவரின் குறட்பாக்கள் பொய்மையைத் தவிர்த்து வாய்மையை முன்னிறுத்துவதே சிறந்த அறம் என்கிறது. எத்தகைய துன்பம் வந்தாலும் பொய்யுரைக்க மாட்டேன் என்ற தனது கொள்கையிலிருந்து அரிச்சந்திரன் தவறவும் தளரவும் இல்லை. பொய்யுரைத்து எனது நாட்டைப் பெற்று அரசனாவதைவிட வாய்மைக்காகத் தான் இத்துன்பம் அனுபவிப்பதையே விரும்புகிறேன் என்று வாய்மையைப் பற்றி நின்றான் என்ற கருத்தும் இங்கு நினைக்கத்தக்கது.

## திருக்குறள் காட்டும் எதிர்காலவியல்

எதிர்காலவியல் என்பது நேற்று எப்படி இருந்தோம்? இன்று எப்படி இருக்கிறோம் நாளை எப்படி இருக்கவேண்டும், நேற்றைய வாழ்வில் தவிர்க்க வேண்டியது என்ன, இன்றைய வாழ்வின் நிறை குறை என்ன நாளைய வாழ்வில் மாற்றம் வேண்டுவது எவற்றில் என்பது போன்றவற்றை எண்ணுவதாக அமைகிறது. மேலும் வள்ளுவர்,

**நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் உலகு (குறள். 336)**

என எதிர்கால வாழ்க்கையை விளக்கிச் செல்கிறார்.

எதிர்காலச் சிந்தனைகளை இன்றைக்கு வளர்த்திருக்கக் கூடிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி எதிர்காலவியல் என்னும் கல்வியாக்கி வளர்ச்சி பெற்ற அனைத்துத் துறைகளிலும் எதிர்காலவியல் அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உணர வேண்டியது அவசியமாகிறது. எதிர்காலவியல் அணுகுமுறை ஒன்று போல் அமைந்ததில்லை. தனித்துறையாக எதிர்கால உலகில் பல்வேறு வகையான அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் உள்ள இவ்வணுகுமுறைகளை இருபது நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆயினும் அவருடைய நூலாகிய திருக்குறளில் எதிர்காலவியல் சிந்தனைகளைப் பெரும்பாலும் காணமுடிகிறது.

இன்றைய வாழ்வின் தன்மை எப்படிப்பட்டது? மாற்றம் வேண்டுவது எவற்றில் நாளை பெற வேண்டுவதைப் பெறும் முயற்சியில் இன்றைய செயல் எண்ண என்பன போன்றவற்றை எண்ணுவதாக எதிர்காலவியல் அமைகிறது. உருவாக்கப்பட்ட எதிர்கால எதிர்பார்ப்பின் நிறைவேற்றத்திற்கான திட்டம் இன்று நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்காலவியல் காட்டுகிறது. எறும்புகள் மழைகாலத்திற்குத் தேவையான உணவுப்பொருளைச் சேமித்தல் போன்று அஃறினை உயிர்களே தம் எதிர்காலம் பற்றிக் கவலைப்படும் போது பகுத்தறிவு கொண்ட மனிதரிடம் இவ்வெதிர்காலச் சிந்தனை வேர் கொண்டிருப்பது இயல்பே.

மனித சமுதாய வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பின் அதன் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அவனது திட்டமிட்ட எதிர்காலச் சிந்தனையும் பெரும் காரணமாக அமையக் காணலாம். சமுதாயத்தின் எதிர்கால நலன் நோக்கிய செயல்பாடுகளில் அறநூல்களுள் ஒன்றாகும். எனவே இங்கு திருக்குறள் ஆய்வு களமாகிறது. வள்ளுவரின் பிறர் நலன் நாடும் சமுதாயச் சிந்தனையாக திருக்குறள் அமைகிறது. அவரவர் மனநிலைக்கு ஏற்ப ஆக்கம் அல்லது அழிவு வழியில் எதிர்காலச் சிந்தனை அமையும் என்ற அடிப்படையில் சமுதாயச் சிற்பியாக, உலகப் பொதுமறை வழங்கிய வள்ளுவரின் எதிர்காலவியல் அணுகுமுறை ஆக்கல் வழிப்பட்டது என்பது சொல்லாமலேயே விளங்கும்.

எதிர்காலச் சிந்தனையாளரின் சிந்தனைகள் நிகழக்கூடிய எதிர்காலம், நிகழ்வதற்கு வாய்ப்புள்ள எதிர்காலம், தாம் விரும்பும் எதிர்காலம் என மூவகைப்படுகிறது. திருக்குறள் அறநூலாதவின் இம்மூன்றையும் உட்கொண்டுள்ளது. நடைமுறையின் பொழுதுபோக்கு எப்படி அமைகிறது என்பதை அளவிட்டு அதன் அடிப்படையில் அதுவே தொடரக்கூடியது என்னும் கணிப்பில் எதிர்காலவியல் அணுகுமுறை வள்ளுவரால் உருவாக்கப்படுகிறது.

**முடிவுரை**

எதிர்காலவியல் அணுகுமுறையை வள்ளுவர் எங்ஙனம் மேற்கொண்டார் என்ற வினாவிற்கு விடைகாணுதல் அரிது. ஆயினும் அவரது குறளில் “எதிர்காலத்திட்டமிடல்” அமைய வேண்டிய முறைமையையும் அவற்றின் தேவையையும் உணர்த்தியுள்ளார். திட்டமிடும் எதிர்காலம் நல்லனவற்றை விளைவிப்பனவாக அடைதல் வேண்டும். திட்டமிட்ட ஒன்ற வெற்றி பெறவேண்டுமானால் அவை எவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் விளக்கியுள்ளார். எத்துறையும் ஓர் அடிப்படை இலக்கினை, நோக்கினைக் கொண்டிருத்தல் இயல்பு. மனித வாழ்விற்கு, நலனுக்கு உறுதுணையான எல்லாத் துறைகளும் அதன் வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பனவற்றை, கண்டு உணர்ந்து, அவற்றைக் களைந்து, அவற்றின் தேவைக்கு ஏற்ப வளர்த்து முன்னேறிச் செல்வதை எதிர்காலவியல் அணுகுமுறையாக அமைகின்றார்.

எதிர்காலம் பற்றிய சிந்தனையும் திட்டமிடலும் அதற்கு உரிய செயற்பாடும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவை என்பதையும் பொருள் பொதிந்த நிறைவான வாழ்க்கையே ஒவ்வொருவரின் வாழ்க்கை நோக்கமாக, அதற்கான திட்டமிடலாக, செயலாக அமையவேண்டும் என்பதையும் எதிர்காலச் சிந்தனையின் பயனாய் மனிதன் தன் தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேற்றப் பாதையில் முயற்சி செய்து அதனால் புதிய புதிய ஆக்கங்களையும் பெறக்கூடும் என்பதையும் மனதில் கொண்டு எதிர்காலவியல் அணுகுமுறையோடு திருக்குறளை அமைத்துள்ளார் என்பது வள்ளுவரின் அசையா நம்பிக்கை நாளை எதிர்பார்ப்புகளுக்காகத் திட்டமிட்டுச் செயற்பட முனைவது இன்றாதலின் நாளை என்பது இன்றே என்று வழங்கப்படுகிறது. ஆகவே, வள்ளுவரின் குறட்பாக்கள் எதிர்காலவியல் அணுகுமுறையில் பொருந்தியதே என்பது துணிவு.

**அடிக்குறிப்புகள்**

1. புறம். பா. 55
2. மதுரை. 191-192
3. மணி. 25:228-231
4. திருமந்திரம், பா. எ. 199
5. கொன்றை. பா. எ. 63
6. உலக. பா. எ. 4

**துணைநூற்பட்டியல்**


1. சோமசுந்தரனார், பொ. வே, (உ.ஆ), சங்க இலக்கியம் மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை, 2007.
2. பரிமேலழகர், (உ.ஆ), திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, 1964.
3. திருமூலர், திருமந்திரம், திருவாவடுதுறை ஆதீனம், 1992.
4. முனைவர் வே. முத்துலட்சுமி, திருக்குறளில் எதிர்காலவியல், அனிதா பதிப்பகம், சென்னை, 2006.